# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


“தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார்; ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது; தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறை மக்களுக்காகப் பரிந்து பேசுகிறார் (உரோ **8: 26-27** )

# திருஅவையில் 21 புதிய கர்தினால்கள்

## பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் கர்தினலாகத் தேர்வு

**வத்திக்கான்:** திருப்பீடத்தின் மூன்று துறைகளின் தலைவர்களாக அண்மையில் நியமிக்கப்பட்ட பேராயர்கள், மலேசிய ஆயர், ஹாங்காங் ஆயர், யெருசலேம் இலத்தீன் வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை, சலேசிய துறவுசபையின் அதிபர் உட்பட 21 பேர் திருஅவையில் புதிய கர்தினால்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர் இவர்களை திருஅவையில் அதிகாரப்பூர்வமாக கர்தினால்களாக உயர்த்துவது செப்டம்பர் 30ஆம் தேதி, உலக ஆயர்கள் கூட்டத்தொடருக்கு முன்னர் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 9, ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரைக்குப்பின் இதனை அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைமக்களின் பணிக்கான உரோமை ஆயரின் சேவையில் ஒத்துழைக்க உள்ள இந்த புதிய கர்தினால்களுக்காக இறைவேண்டல் செய்யுமாறும் அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

### கர்தினலாகத் தேர்வுப்பெற்ற செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுக்கு மலேசிய கத்தோலிக்கர்கள் வாழ்த்துக் கூறினர்.

கோலாலம்பூர்: மலேசியாவின் இரண்டாவது உரோமன் கத்தோலிக்க கர்தினலாக பினாங்கு ஆயர் மேதகு டத்தோஶ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு மலேசிய கத்தோலிக்கர்கள், குறிப்பாக பினாங்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது ஆழ்ந்த மகிழ்ச்சியையும் வெற்றி களிப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். மலேசியா திருஅவைக்குக் கிடைத்த பெரும் மரியாதைக்குரிய ஆசீராக இந்தத் தேர்வு கருதப்படுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ், வத்திக்கான் செய்தி பிரிவால் மேற்கோள் காட்டப்பட்ட செய்தியில், 'கர்தினால்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து வருகிறார்கள் என்பது திருஅவையின் உலகளாவிய தன்மையை வெளிப்படுத்துகிறது என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன், இது பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் கடவுளின் இரக்கமுள்ள அன்பைத் தொடர்ந்து வெளிப்படுத்துகிறது என்றார்.

ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் கெடா, பெர்லிஸ், பேராக், கிளந்தான் மற்றும் பினாங்கு மாநிலங்களை உள்ளடக்கிய பினாங்கு மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயர் ஆவார். அத்துடன், மலேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவராகவும் உள்ளார்.

இவர் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணையின் கத்தோலிக்க ஆயர்கள் பேவையின் தலைவராகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆயர் செபஸ்தியன், தமது தனிப்பட்ட செய்தியில், கார்தினலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட



*கர்தினலாகத் தேர்வுப் பெற்ற ஆயர் செபஸ்தியன்*

தற்கு தனது மனமார்ந்த மற்றும் பணிவான நன்றியைத் தெரிவித்தார். மேலும் இந்த நியமனம் அமைதி, நல்லிணக்கம் மற்றும் மனிதகுலத்தின் அன்பை மேம்படுத்துவதில் திருஅவையின் பணியை முன்னெடுத்துச் செல்ல உதவும் என்றுக் கருத்துரைத்தார்

“மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆயர்கள் பேரவையிலிருந்து மறைந்த கார்டினல்கள் சோட்டர் பெர்னாண்டஸ் (மலேசியா) மற்றும் கொர்னேலியுஸ் சிம் (புருணை), மற்றும் கார்தினல் வில்லியம் கோ (சிங்கப்பூர்) ஆகியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.இவர்களோடும், ஆசியாவில் உள்ள திருஅவையோடும் இணைந்து, உலகளாவிய கத்தோலிக்க திருஅவையில், உயிர்த்தெழுந்த கிறிஸ்து நியமித்த புனித பேதுரு, திருத்தூதர்கள் மற்றும் அவர்களது வழிமரபில் ஒப்படைக்கப்பட்ட பணிக்கும் திருத்தூதுப்பணி தொடர்ச்சிக்கும் கூட்டுச் சாட்சியம் அளிக்கிறோம் என்றார். மேலும், முதன்மையாக தூய ஆவியாரிடம் ஒப்படைக்கப்பட்ட பணி மலேசியா, ஆசியா மற்றும் அதற்கு அப்பாலும் தொடர்வதாக என்றும் கருத்துரைதார்.

"கடவுளின் திராட்சைத் தோட்டத்திலும் உலகிலும் சீடர்கள் மற்றும் நம் பணியாளர்கள் , எல்லா இடங்களிலும் உள்ள கடவுளின் மக்களுடன் சேர்ந்து, பொதுநிலையினர், துறவறத்தார் மற்றும் அருள்பணியாளர்கள் மற்றும் பல உறுப்பினர்கள் மூலம் இந்த பணி தொடர்கிறது. மகிழ்ச்சி, இரக்கம் மற்றும் எதிர்நோக்குடன் கடவுளின் அரசை நாங்கள் ஒன்றாகத் தேடுகிறோம், உருவாக்குகிறோம் ”என்று ஆயர் மேலும் விவரித்தார்.

ஆயர் செபஸ்தியன் நவம்பர் 11, 1951-ல் மலேசியாவின் ஜொகூர் பாருவில் பிறந்தார். அவர் சிங்கப்பூரில் உள்ள புனித கப்ரியேல் அருட்சகோதரர்களின் சிறு மடத்தல் இணைந்தார். பின்னர், 1964 முதல் 1966 வரை புனித கப்ரியேல் துறவரத்தார் சமூகத்தில் வசித்தார், தொடர்ந்து 1967 முதல் 1970 வரை சிங்கப்பூரில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியரின் மைனர் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

1971 இல், அவர் பினாங்கில் உள்ள கோலேஜ் ஜெனரல் எனுப்படும் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். ஜூலை 28, 1977 இல், அவர் மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டத்தின், ஜொகூர் பாரு, அன்னை அமல உற்பவி பங்கில் அருள்பணியாளராக அன்றைய ஆயர் ஜேம்ஸ் சான் சூன் சியோங் அவர்களால் அருள்பொழிவுச் செய்யப்பட்டார்.

அடுத்து, நான்கு ஆண்டுகள் கழித்து, அக்டோபர் 1981 முதல், அருள்தந்தை செபஸ்தியன், உரோமில் உள்ள Angelicum Pontifical University of St Thomas Aquinas எனும் பல்கலைக்கழகத்தில் டோக்மேடிக் இறையியல் கல்வியில் (Dogmatic Theology) ஜூன் 1983 இல் பட்டம் பெற்றார். அத்தோடு நின்றுவிடாமல், ஜூலை 1990 முதல் ஜூன் 1991 வரை அவர் அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள மேரிக்னோல் ஸ்கூல் ஆஃப் தியாலஜியில் (Maryknoll School of Theology in New York, USA) பல்கலைக்கழகத்தில் ‘நீதி மற்றும் அமைதிக்கான துறையில் உயர் பட்டம் பெற்றார் என்பது இவரது உயர் கல்வி பின்னணியாகும்.

கடந்த ஜூலை 7, 2012-ல், ஆயர் அந்தோணி செல்வநாகம் அவர்களின் பதவி ஓய்வுக்குப் பிறகு, இவர் பினாங்கு மாறைமாவட்டத்தின் ஆயராக முன்மொழியப்பட்டு, ஆகஸ்டு 20, 2012ல், ஆயாராக அருள்பொழிவுப் பெற்றார்.

ஆயர் செபஸ்தியன் அவர்கள் 2015 முதல் 2017 வரை பௌத்தம், கிறிஸ்தவம், இந்து, சீக்கியம் மற்றும் தாவோயிசம் (MCCBCHST) ஆகியவற்றின் கூட்டு அமைப்புக்கும், மற்றும் மலேசிய கிறிஸ்தவ கூட்டமைப்பு (CFM) ஆகிய மலேசிய ஆலோசனை பேரவைகளுக்கு துணை தலைவராக இருந்தார்.

நிறைவாக, ஆயர் செபஸ்தியன் அவர்கள் ஆசிய ஆயர்கள் பேரவையின் (FABC) மத்தியக் குழு உறுப்பினராகவும் உள்ளார் என்பதும், சமீபத்தில் ஜனவரி 1, 2023 அன்று நடைபெற்ற ஆசிய ஆயர்கள் பேரவை கூட்டமைப்பின்- சமூக ஊடகத் தொடர்பு அலுவலகத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார் என்பது இவரது மறுபக்க பணியாகும்.

மலேசிய திருஅவையிலும், மலேசிய, சிங்கப்பூர் மற்றும் புருணை எனும் வட்டாரத் திருஅவையிலும், ஆசிய திருஅவையில் பல பொறுப்புகளை ஏற்று செவ்வன ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் ஆற்றி வரும் ஆயர் செபஸ்தியன் அவர்களின் அயாரா உழைப்பை அங்கீகரிக்கும் வண்ணம் ஆண்டவர், கர்தினால் எனும் மேலும் ஓர் உயர்நிலைக்கு உயர்த்த ஆவல் கொண்டார் என்றே கூற வேண்டும்.

இவர், திருஅவையில் அதிகாரப்பூர்வமாக கர்தினாலாக வரும் செப்டம்பர் 30ஆம் தேதி அருள்பொழிவு ஏற்பார். இவருடைய நலவாழ்வுக்கும் பணிக்கும் நமது இறைவேண்டல்களை நாளும் சமர்பிப்போம்.

*-செய்தி தொகுப்பு -ஆர்.கே.*

# பல்வேறு ஊடகத் தொடர்பான பயிற்சியில் மலேசிய ஆயர்கள் கலந்து கொண்டார்கள்

**ஜோகூர் பாரு:** மலேசியா-சிங்கப்பூர்-புருணை வட்டார கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCMSB) ஏற்பாட்டில் ஒரு நாள் தீவிர ஊடகப் பயிற்சிப் பட்டறை, தகவல் தொடர்பு மற்றும் விளக்கம் என்ற தலைப்பில் கடந்த ஜூலை 10ஆம் தேதி, இங்குள்ள மஜோடி மையத்தில் நடைபெற்றது. ஆயர்கள். அருள்பணியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் மறைமாவட்ட சமூக ஊடகப் பணியாளர்கள் இப்பயிற்சி பட்டையில் கலந்துகொண்டனர்.

ஊடகத் திறன்கள் மற்றும் நுட்பங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, பல்வேறு விளக்கக்காட்சி வழி ஒருவர் எளிதாகவும் பயனுள்ளதாகவும் பயனுள்ள வகையில், திருஅவையை பரந்த உலகிற்கு எவ்வாறு வழங்குவது என்பதை



மையமாகக்கொண்டு அப்பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது.

ஒளிபரப்பு ஊடகங்கள், சமூக ஊடக இணையத் தளங்கள் மற்றும் பல்வேறு இயங்கலை பொது தகவல்/தொடர்பு தளங்கள் அனைத்தும், உலகில், துல்லியமான மற்றும் நம்பகமான செய்தி ஒளிபரப்புக்கு மிக முக்கியமான கருவிகளாக உள்ளன என்று மலேசிய-சிங்கப்பூர்-புருணை வட்டார கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCMSB) கருதியதை முன்னிட்டு இப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து பல்துறை ஊடக ஆலோசகர் மற்றும் பயிற்சியாளர் அகஸ்டின் அந்துவன் அவர்களால் இப்பயிலரங்கம் நடத்தப்பட்டது. இவர் தனது 30 ஆண்டுகால 'உண்மை வாழ்க்கை' அனுபவங்களைப் அன்று பகிர்ந்துகொண்டார்.

மேலும் இப்பட்டறையில், ஒருவரையொருவர் ஊடகத்தின் 'நேரலை' (live), நேர்காணல் பயிற்சியிலும் ஆயர்கள் பங்கேற்றனர். கடினமான கேள்விகளைக் கேட்கும் பத்திரிக்கையாளராக அகஸ்டின் நடித்தார். இந்நிகழ்வு ஒரு 'கண்-திறப்பாக' இருந்தது, இதன் மூலம் செய்தித் தொடர்பாளர்கள் தங்கள் செய்தியை தெளிவாகவும் நம்பத்தகுந்த விதத்திலும் முன்வைக்க வேண்டும் என்பதையும், எதிர்பாராத கேள்விகளை எதிர்கொள்ளும் போது விரைவாக சிந்திக்கவும், அந்த இடத்திலேயே பதில் அளிக்கும் திறனை மேம்படுத்தவும் கற்றுக்கொண்டனர்.

இறுதியாக, ஊடக மற்றும் நெருக்கடி தொலைதொடர்பு மாநாடு கூட்டங்களில் பங்கேற்கும் போது, பங்கேற்பாளர்கள் ஊடக மாநாட்டிற்குத் தயாராவதற்கும், 'பத்திரிக்கையாளர்களிடமிருந்து' கேள்விகளை எதிர்நோக்குவதற்கும், ஏற்கனவே உள்ள விஷயங்களை ஒருங்கிணைப்பதற்கும், அடுத்து எதிர்பாராத நெருக்கடி நிகழ்வின் போது, எவ்வகையில் ஊடகங்கள் வலுவான மற்றும் உற்ற துணையாக கைக்கொடுக்கும் என்பதை அறிந்துகொள்வதற்கும் அன்றைய பட்டறையில் கற்றுக்கொடுக்கப்பட்டது.

*செய்தி தமிழாக்கம் : ஆர்.கே*

# உலக தாத்தா பாட்டிகள் தினம் கொண்டாட்ட நிறைபேறுபலன்கள்

இன்று 23 ஜூலை 2023, மூன்றாவது உலக தாத்தா பாட்டிகள் தினத்தைக் கொண்டாடுகிறோம். **'தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.'** (லூக் 1:50) என்ற கருப் பொருளின் கீழ் இத்தினத்தைக் கொண்டாட நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இவ்வாண்டு, தாத்தா பாட்டிகள் தினத்தையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ், ஒரு சிறப்பு அறிவிப்பை செய்துள்ளார். வத்திக்கானில் உள்ள திருத்தூதர் பேதுரு பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெறும் திருப்பலியிலோ அல்லது உலக பல்வேறு பகுதிகளில் நடைபெறும் திருப்பலிகளிலோ பங்கேற்கும் தாத்தா பாட்டிகள், முதியோர் மற்றும் எல்லா



இறைநம்பிக்கையாளர்களுக்கும் நிறைபேறுபலன்கள் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

அத்துடன், நோயுற்றவர்கள், கைவிடப்பட்டவர்கள், உடல் குறைபாடுகளுடன் இருப்போர் போன்ற தேவையிலுள்ள அல்லது சிரமங்களை எதிர்கொள்ளும் வயதான சகோதர சகோதரிகளை நேரில் சென்றோ அல்லது தகவல்தொடர்பு மூலமோ சந்திக்க கணிசமான நேரத்தை ஒதுக்குபவர்களுக்கும் திருத்தந்தையின் இந்த நிறைபேறுபலன்கள் கிட்டும் என்றும் அவர் அறிவிப்பு செய்துள்ளார்.

ஒப்புரவு அருளடையாளத்தை வழங்கும் அதிகாரம் பெற்ற அருள்பணியாளர்கள் அதனை வழங்குவதில் தாராள உள்ளத்தோடு இருக்க வேண்டும் என்று திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை தாத்தா பாட்டிகள் தினத்தையொட்டி, அறிவுறுத்தியுள்ளது.

மூன்றாம் உலக தாத்தா பாட்டி மற்றும் முதியோர் தினத்திற்கு மட்டுமே இந்த ஆணை நிறைபேறுபலன்களை வழங்குகிறது.

ஆகவே, நமது தாத்தா பாட்டிகளோடு திருப்பலியில் கலந்துக்கொள்ள ஆவன செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

குழந்தைகளுக்கு நற்பண்புகள் மற்றும் கல்வி கற்றுக்கொடுப்பது, நீதி நெறிகளைப் புகட்டுவது, இரக்கம், அன்பு, நம்பிக்கை ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பதில் இன்றைய நவீன காலத்து தாத்தா, பாட்டிகள் பெற்றோர்களுக்கு பேருதவியாகவும் முன்னுதாரணமாகவும் உள்ளனர் என்றால் மிகையாகாது.

இக்காலத்து தாத்தா, பாட்டிகளில் பெரும் பாலானவர்கள் படித்தவர்கள். அவர்களது வேலையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். தங்கள் பேரக்குழந்தைகளுக்குக் கண்டிப்புடன் கல்வியை கற்றுக் கொடுப்பதில் அதிக ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடன் நேரத்தை செலவிடும் குழந்தைகள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். தங்கள் மனதில் தோன்றும் சந்தேகங்கள், விருப்பங்களை தாத்தா, பாட்டிகளோடு தயங்காமல் பகிர்ந்து கொள்வார்கள். மேலும், குழந்தை பருவத்தை சுவாரசியமாக்குவதில் தாத்தா, பாட்டிகளுக்கு முக்கிய பங்கு இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

உண்மையில் மற்ற குழந்தைகளை விட தாத்தா, பாட்டிகளோடு வளரும் குழந்தைகளின் நடத்தைகளும், செயல்பாடுகளும் மேம்பட்டதாக இருக்கும் என்பது அறிவியல் ரீதியாக நிரூபணமாகியுள்ளது. அவர்களிடம் வளரும் குழந்தைகள் பெரியவர்களிடமும், அறிமுகம் இல்லாதவர்களிடமும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை புரிந்து கொண்டு செயல்படுவார்கள்.




# இறைவார்த்தை இறைவன் விதைக்கும் விதை!

பொதுக்காலத்தின் 16ம் ஞாயிறு இன்று. கடவுள் நீதியும் நேர்மையும் உள்ளவர். ஏனெனில் அவரே நீதியின் ஊற்று (சாஞா.12:16) என முதல் வாசகம் கூறுகின்றது. அவர் நல்லவர், மன்னிப்பவர் என இன்றையத் திருப்பாடலும் (86:5) கூறுகின்றது. அன்பினால் படைக்கப்பட்ட மனிதன் தீமை செய்தாலும் அவன் மீது பேரன்பு காட்டுபவர்; மனிதனின் மன்றாட்டுக்குச் செவி கொடுப்பவர், கடவுள். இதுவே இன்றைய வாசகங்கள் கூறும் மையக்கருத்து.

நற்செய்தியில் கூறப்படும் விதைப்பவர் உவமை, கடுகு விதை உவமை, புளிப்பு மாவு உவமை ஆகிய மூன்றும், விண்ணரசில் நமக்கு இடமுண்டு என்பதைக் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு மனிதனும் வான் வீட்டில் அடைக்கலம் புக வேண்டும் என்கிறது இறைவாக்கு. பிறந்த போது இருந்த குழந்தை உள்ளம் போக போக மாறி விட்டது. இதனைதான் விதைப்பவர் உவமை எடுத்துரைக்கிறது. மனிதன் நன்றாக படைக்கப்பட்டான் என தொடக்க நூலில் வாசிக்கிறோம். "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன" (தொநூ.1:31). விதைக்கும் போது நல்ல விதைகளே விதைக்கப்பட்டன. கடவுள் நல்ல மனிதரையே படைத்தார். இடையில்தான் விதைகளோடு களைகளும் காணப்பட்டன. 'இது பகைவனுடைய வேலை'(மத்.13:28) என்று நற்செய்தி கூறுகிறது. யார் அந்த பகைவன்?

விண்ணரசு முதலிம் நமது உள்ளங்களில் உதயமாக வேண்டும். "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார். (1கொரி.3:16). தூய ஆவியின் கனிகளான;"அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்" (கலா.5:22) ஆகியவை நம் உள்ளத்தில் செயல்பட தூய ஆவியானவரை அனுமதிக்க வேண்டும்

விண்ணரசின் தொடக்கம் இவ்வுலகில் காணக்கிடக்கின்றது. ஆயினும் இறுதிநாளில் தான் விண்ணரசின் பலன் தெரியும். மீட்படைந்து விட்டோம் என இடையில் யாரும் தீர்ப்பிடவோ தம்பட்டம் அடித்துக் கொள்ளவோ முடியாது. கடவுள்தான் இறுதிநாளில் தீர்ப்பு வழங்குவார். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல், நமது சின்னஞ்சிறிய செயல்கள் விண்ணரசுக்குப் பாதை அமைக்கலாம். சிறியக் கடுகு விதை பெரிய மரமாக வளர்வது போலவும், புளிப்புமாவு மாவு முழுவதும் புளிப்பேறச் செய்வது போலவும், நல்லவர்கள் மற்றும் தகுதியுடையோர் எல்லாரையும் சேர்த்துக் கொள்ள கடவுளே, விண்ணரசை விரிவுப்படுத்தக்கூடும்.

இந்த உலகத்தில் களைகள் என்று சொல்லப்படும் அலகையின் ஆதிக்கம் எப்போதும் இருக்கும். தனது வலிமையால், மக்களை மயக்கி, அவர்களைக்குழப்பி தன்னுடைய ஆதிக்கத்தின் பிடியில் வைத்திருக்கும். நாம் அதைப்பார்த்து பதற்றப்படத் தேவையில்லை. ஆனால், தீய சக்திகள் இருக்கிறது என்ற உணர்வு நமக்கு வேண்டும். அதைத்தவிர்க்க வேண்டும் என்ற உறுதி நமக்கு வேண்டும். அந்த உணர்வே களைகளிடமிருந்து காப்பாற்றி விடும்.

அத்தோடு, வேலை செய்யவேண்டிய நேரத்தில் தூங்கிவிட்டு. அதன் பின் களை களைப் பிடுங்க முயற்சிப்பது மதியீனம். அது பயிரை அழிக்கும் செயல். எனவே செய்யவேண்டிய நற்செயலை உடனே செய்ய முற்படுவோம். கைமேல் பலன் கிட்டும்.

*அந்தோணி இன்னாசி*
*ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்*

**ஆண்டின் பொதுக்காலம் 16-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | 13: 24-43 |
| பதி.பாடல் | 65: 9abc. 9d-10. 11-12. 13 2 |
| 2வது வாசகம் | உரோ 8: 26-27 |
| நற்செய்தி | மத் 13: 24-43 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**